# connect2research

## சேவைபெறுநர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களைப் புதிய ஆராய்ச்சி வாய்ப்புகளுடன் தொடர்பு படுத்தல்

Holland Bloorview வைத்தியசாலை, **connect2research** (கொனெக்ற்-ரு-றிசேர்ச்) என்ற திட்டத்தின் இருப்பிடமாக உள்ளது. புதிய ஆராய்ச்சி முயற்சிகள் மற்றும் ஆய்வுகளுக்கும் சகல சேவை பெறுநர்கள் மற்றும் குடும்பங்களுக்கும் இடையில் காப்புநிலை கொண்ட ஓர் இணைப்பினை ஏற்படுத்தும் சாதனமாக இத்திட்டம் உள்ளது.






ஆராய்ச்சி என்பது, வலுகுறைவுகள் பற்றி நாங்கள் மேலும் அறிந்து கொள்வதற்கும், புதிய தொழில் நுட்பங்களையும சிகிச்சை முறைகளையும் உருவாக்கி அவற்றின் திறனைக் கணிப்பதற்கும், எமது பிள்ளைகள், இளைஞர், பெற்றோர் ஆகிய யாவருக்கும் மிகவும் அர்த்தமுள்ள ஆரோக்கியமான எதிர்காலத்தை வழங்கும் எமது இலட்சிய நோக்கினை நாம் அடைவதற்கும் உதவ முடியும்.

## ஓர் ஆராய்ச்சியில் பங்குபற்றுவதற்கான நாட்டம் என்பது சம்பந்தப்பட்ட ஆரோக்கிய சேவை நிறுவனம், அது சேவை வழங்கும் சேவைபெறுநர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகத்துப் பங்காளர்கள் ஆகியோருடன் மெய்யான தொடர்புகளையும் உறவுகளையும் கட்டியெழுப்புவதில் தங்கியுள்ளது என்று நாம் நம்புகிறோம்.

Holland Bloorview வைத்தியசாலை ரொறொன்ரோ பல்கலைக் கழகத்துடன் பூரணமுறையில் இணைந்து செயற்படும் மருத்துவம் கற்பிக்கின்ற ஒரு வைத்தியசாலை ஆகும். எமது சேவைபெறுநர்களாக உள்ள சிறுவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மிகச் சிறந்த தரம் கொண்ட பராமரிப்பினை வழங்குவதில், நாம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம்.

இந்த **connect2research** திட்டத்தில் அடங்கியுள்ள தரவுத்தளம், வைத்தியசாலையின் அங்கீகாரம் பெற்ற, காப்புநிலை கொண்ட ஒரு மென்பொருளை உபயோகித்து, அதன் மூலம் Holland Bloorview பேணப்படும் சேவைபெறுநரின் மின்னியல் முறையிலான ஆரோக்கிய பதிவேட்டில் காணப்படும் பிறந்த திகதி, மருத்துவ நிலையின் உறுதிப்பாடு, தொடர்பு கொள்வதற்கான தகவல் ஆகிய மட்டுப்படுத்திய தகவலுடன் தொடர்பு கொண்டதாக உள்ளது. குறித்த ஓர் ஆராய்ச்சி ஆய்வுக்குப் பொருத்தமான சேவைபெறுநர்களை அடையாளம் கண்டு அவர்களை Holland Bloorview ஆராய்ச்சியாளர்களுடன் நேரடியாக இணைப்பதற்கு இத்தொடர்பு உதவிகரமாக உள்ளது.

ஒரு சேவைபெறுநரின் ஆரோக்கிய பதிவேடு எப்பொழுதும் பாதுகாக்கப்படும் தகவலாகவே பேணப்படுகிறது. உங்கள் பராமரிப்புக் குழுவில் அடங்கி உள்ள, அதிகாரம் பெற்றவர்களை தவிர வேறு எவரும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அப்பதிவேட்டினை பார்க்க முடியாது. குறிப்பிட்ட ஓர் ஆராய்ச்சிக்கான வரையறைத் தகவலின் அடிப்படையில், Holland Bloorview ஆராய்ச்சியாளர் ஒருவருக்கு அந்த ஆய்வில் பங்குபற்றும் தகைமை கொண்ட சேவை பெறுநர்களின் பெயர் மற்றும் அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான தகவல் ஆகியவற்றை **connect2research** தரவுத்தளம் வழங்குகிறது. Holland Bloorview ஆராய்ச்சியாளர் ஒருவர் உங்களைத் தொலைபேசியில் அழைத்து அல்லது தகவலினைக் கடிதம் மூலமாக அனுப்பி, நீங்கள் குறித்த ஆராய்ச்சி ஆய்வு அல்லது செயல்திட்டம் பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா என்று கேட்கலாம். நீங்கள் இச்சந்தர்ப்பத்தில் ஆய்வுக்கு ஆய்வு என்ற அடிப்படையில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப அதில் பங்குபற்றவோ அல்லது மறுக்கவோ முடியும்.



Holland Bloorview வைத்தியசாலையில் 2011 மே மாதமும் மற்றும் அதன் பின்பும் சேவைகளைப் பெறுகின்ற சேவைபெறுநர்கள் எல்லோரும் சுயமாகவே இந்த **connect2research** திட்டத்தில் சேர்க்கப்படுவர் என்றபோதிலும், அவர்கள் எந்த நேரத்திலும் இப்பதிவில் இருந்து சுயவிருப்பத்தின் பிரகாரம் வெளியேற முடியும். ஓர் ஆராய்ச்சி ஆய்வில் நீங்கள் பங்குபற்றுவது /பங்குபற்றாமல் விடுவது பற்றிய உங்கள் தீர்மானம் மற்றும் **connect2research** தரவுத் தளத்தில் உங்கள் பெயரும் அடங்கச் செய்வது /அடங்கச் செய்யாமல் விடுவது போன்ற காரணங்களால், நீங்கள் Holland Bloorview பெறுகின்ற பராமரிப்பு அல்லது சேவைகள் பாதிக்கப்படுவது இல்லை.

மேலதிகமான தகவல், உங்கள் கருத்துரைகள், கரிசனங்கள் போன்றவற்றுக்கும் திட்டத்தில் சேராது சுயவிருப்பத்தின்படி வெளியேறுவதற்கும் தயவுசெய்து *research.hollandbloorview.ca/connect2research* என்ற இணையத்தளம் செல்லுங்கள், அல்லது மாற்றுவழியாக 416-425-6220 தொடரெண் 3000 என்ற தொலைபேசி எண்ணில் அல்லது connect2research@hollandbloorview.ca என்ற மின்னஞ்சல் முகவரியில், **connect2research** திட்டக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.